# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# O.S. No.18/2017

PW1 செல்லம்மாள் நாள் 10.12.2021

## பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

2 ஆம் வாதியை நாங்கள் விசாரிப்போம். தாவா சொத்தின் ஒரு பகுதி என் மகன் பெயரில் கிரையம் ஆகியுள்ளதா என்றால் இல்லை. 30.10.2008 இல் தாவா சொத்தின் ஒரு பகுதியை என் மகன் பெயரில் கிரையம் எழுதி என் கணவரை கார்டியனாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் குடும்ப சொத்தின் ஒரு பகுதியை பிரதிவாதியிடமிருந்து என் மகன் பெயரில் கிரையம் எழுதினோம் என்றால் சரிதான். அந்த சொத்தை தாவாவில் சேர்க்கவில்லை. கிரையம் செய்வதற்கு முன்பு அது கூட்டுக்குடும்ப சொத்து தான் என்றால் சரிதான். எங்கள் தாயாருக்கு தனியாக வருமானம் எதுவும் இல்லை, அவருக்கு என் தகப்பனார் தான் சவரச்சனை செய்தார். தாவா சொத்துக்கள் என் அப்பாவின் சம்பாத்தியத்தைக்கொண்டுதான் வாங்கப்பட்டது. என் அம்மா பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் உள்ளது. அதில் என் அம்மாவிற்கு வாழ்நாள் முழுவதும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. என் அம்மாவிற்கு வாழ்நாள் உரிமை மட்டும் தான் தாவாவில் கேட்டுள்ளோம். இந்த சொத்து என் அம்மாவிற்கு என் அப்பாவினுடைய தான செட்டில்மெண்ட் மூலம் கிடைத்ததாக கேட்கிறோமா, அல்லது என் அம்மாவின் சொத்து என்ற அடிப்படையில் கேட்கிறோமா என்றால் என் அம்மாவின் சொத்து என்ற அடிப்படையில் கேட்கிறோம். என் தகப்பனார் 25 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். தாவா சொத்துக்கள் என் அண்ணன் கணபதியின் அனுபவத்தில் உள்ளது. தற்பொழுது கணபதி வெளிநாட்டில் உள்ளதால் அதை கணபதியின் மகன் அனுபவித்து வருகிறார். கணபதி வெளிநாட்டில் இருந்தபோது அவர் அனுப்பிய பணத்தையெல்லாம் 2 ஆம் வாதியின் பெயரில் தான் அனுப்பினார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் காலத்திற்கு பிறகு கணபதி தான் அனுபவித்து வந்தார்.

அதை அவர் சொந்த சொத்து போல அனுபவித்தார் என்றால் சரிதான். பெண்பிள்ளைகள் போய் பங்கு கேட்டால் இல்லை என்று சொன்னார். 1995 இல் என் தகப்பனார் இறந்த பொழுது வாய் மொழியாக பாகம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வாய்மொழியாக பாகம் ஏற்பட்டதில் தாவா சொத்துக்கள் கணபதிக்கு பிரிந்துவிட்டதாகவும், எங்களுக்கு திருமணம் சீர்வரிசைகள், செய்ததால் பாகம் கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அண்ணன் வெளிநாட்டில் இருந்த அனுப்பிய பணத்திற்கு கணக்கு கேட்டதால் இந்த வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், தாவா சொத்தில் எனக்கு பாகம் கிடைக்கக்கூடியதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் சம்பாத்தியம் செய்ததும், விவசாயத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்துதான் சொத்துக்கள் வாங்கினார்.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.